பாராட்டுக்கள் கிரிதரன் --- முருகபூபதி

Written by administrator
Friday, 21 April 2017 07:05 - Last Updated Friday, 21 April 2017 07:09

'தமிழ்க்கவி பற்றிய சர்ச்சை சம்பந்தமாக நான் 'பதிவுகள்' இணைய இதழில் பதிவு செய்திருந்தேன். அதற்கு எழுத்தாளர் ஆற்றிய எதிர்வினை இது. நன்றி முருகபூபதி.

அன்புள்ள நண்பர் கிரிதரனுக்கு வணக்கம். தமிழ்க்கவி தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்கு நீங்கள் நல்லதொரு விளக்கம் தந்துள்ளீர்கள். அதற்காக உங்களைப் பாராட்டுகின்றேன். தமிழ்க்கவியின் கட்டுரைக்காக எதிர்வினையாற்றியவர்கள் இவ்வளவுதூரம் அமர்க்களம் செய்திருக்கத் தேவையில்லை. மலையகத் தமிழர்களின் அவலம் முடிவுறாதது. செ. கதிர்காமநாதனின் " வெறும் சோற்றுக்கே வந்தது " (அஞ்சலியில் வெளியான கதை) டானியலின் சில படைப்புகள். இவ்வாறு நீங்கள் சொல்வதுபோன்று பல தகவல்கள் ஆதாரம். எனினும் நீங்கள் உரியநேரத்தில் முன்வந்து சரியான விளக்கம் தந்துள்ளீர்கள். வாழ்த்துகின்றேன். நன்றி.

அன்புடன்

முருகபூபதி

1 / 1